1982 பிப்ரவரி 5]

வேண்டுமென்று நிலையில் உள்ளவர்களைக் காட்டிலும் இந்த நல்லாசிரியர்கள் சமுதாயத்திற்குத் தேவை என்ற அடிப்படையில் அவர்களை ஊக்குவிப்பதற்காக இப்படிப்பட்ட நல்லாசிரியர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

சேலம் அரசு கலைக் கல்லூரியில் மாலை நேர முதுகலை வகுப்புகள் துவக்கும் திட்டம்.

வினா எண் 47 : செல்வி ப, விஜயலட்சுமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் அரசு கலைக்கல்லூரியில் மாலை நேர வகுப்புகளின் முதுகலை வகுப்புகள் நடத்த அரசு முடிவெடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், வரும் கல்வியாண்டில் இத்திட்டம் செயல் படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) கணிதத்தில் இளமறிவியல் பட்டத்தகுதி B.Sc. (Maths) பற்று மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுமகணித ஆசிரியர்கள் தங்கள் கல்விதகுதியை உயர்த்திக்கொள்ள உதவும்வகையில் கணிதவியல் முது அறிவியல் (M sc., Maths.) துறையில் மாலைநேர வகுப்புகள் துவங்க பல்கலைக்கழகத்திற்குக் கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது. பல்கலைக்கழகம் ஒப்புதல் தருவதைப் பொறுத்து 1981—82 ஆம் கல்வி ஆண்டில் இந்த மாலை நேர முது அறிவியல் வகுப்பு துவக்கப்படுவது அமையும். இந்த வகுப்புகளில் ஆசிரியரல்லாதோர் சேர இயலாது.

செல்வி ப. விஜயலட்சுமி : தலைவர் அவர்களே, தற்போது மாலை நேரக் கல்லூரி வகுப்புகளில் என்ன என்ன பிரிவுகள் சொல்லித்தரப் படுகின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. செ. செம்மலை : தலைவர் அவர்களே, இதுபோன்ற மாலை நேர வகுப்புகளில் விஞ்ஞானம் பாடங்களை அறிமுகப் படுத்த அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பி. எஸ். சி. (மேத்ஸ்) கூட ஒரு விஞ்ஞான வகுப்புத்தான் அதை ஆரம்பித்த பிறகு மற்றவற்றைப்பற்றி யோசித்து எந்தெந்த வகுப்புகள் தேவையோ அவற்றை ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுக்கலாம்.

[1982 பிப்ரவரி 5

திரு. ப. வெங்கடசுப்பிரமனியன் : பேரவைத் தலைவரவர்களே, இதுபோன்ற காலைநேர வகுப்புகளைத் தமிழகத்தில் அனைத்து மாவட்டத் தலை நகரங்களிலும் அரம்பிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே மற்றக் கல்லூரிகளிலேயும் மாலை நேர வகுப்புகளுக்குப் போதுமான தேவையிருக்கும் என்ற நிலை இருக்குமேயானால், அதுபற்றி அந்தக் கல்லூரிகளிலிருந்து அவர்கள் பரிந்துரை செய்து பல்கலைக் கழகத்திற்கு அனுப்பினால் பல்கலைக்கழகம் அரசினுடைய நிலைகைளை உணர்ந்து அவர்கள் அதற்கான அனுமதியைப் தருவார்கள்.

கெங்கவல்லி அரசினர் மேல் நிலைப்பள்ளி.

*வினா எண் 48—திருமதி தா. இராசாம்பாள் ; மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா---

(அ) கெங்கவல்லி (சேலம்) அரசினர் மேல்நிலைப்பள்ளி பிரித்து பெண்களுக்கென தனி பள்ளி தொடங்க அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

(ஆ) இவ்வாண்டிலேயே (1981–82) இது நிறைவேற்ற படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மற்றும் (ஆ) 1981 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 10 ஆம் நாளிட்ட கல்வித் துறை அரசாணை நிலை எண். 1069-ல் கெங்கவல்லி அரசினர் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவியர்களை தனியே பிரித்து 1981–82 ஆம் ஆண்டில் பெண்களுக்கென தனியாக உயர் நிலைப்பள்ளி துவங்க அனுமதி வழங்கி ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி பள்ளி 15—7—1981 முதல் நடைபெற்று வருகிறது.

திருமதி தா. இராசாம்பாள் : பேரவைத் தலைவரவர்களே இப்பள்ளியைத் துவங்கியதற்காக என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலேயும் என்னுடைய சார்பிலேயும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன் அங்கே உள்ள ஆசிரியர் பயிற்சிப்பள்ளியில், இருபது ஏக்கர் உள்ள இடத்தில் மோட்டாரைப்பொருத்திதோட்ட வேலையையும் ஆரம்பிப்பதற்குச் சாதகமானநிலைமைகள்இருக்கின்றன அங்கேகிணறும் உள்ளது. அதே நேரத்தில் பெண்கள் பயிலுகின்ற பள்ளிக்கும் காம்பவுண்ட் இல்லாமல் திறந்த வெளியாக இருக்கிறது. எனவே அங்கே சுற்றுச் சுவர் ஒன்றும் அமைத்தும் மோட்டார் அமைத்துத் தோட்ட வேலைகளுக்கான நிலைகளையும் ஏற்படுத்தித்தர வேண்டும், அவர்களுடைய சொந்த உபயோகத்திற்கும்